113—

மீன் பதனிடும் பூங்கா

***6222—திரு. மா. கோவிந்தராசு:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *பேராவூரணி தொகுதியிலுள்ள கடற்கரைப் பகுதியில் மீன் பதனிடும் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *தஞ்சாவூர் மாவட்டத்தில் மல்லிப்பட்டினம் மற்றும் சேதுபாவாசத்திரம் ஆகிய மீன்பிடி இறங்குதளங்களை உள்ளடக்கிய 27 கிராமங்கள் உள்ளன. இம்மாவட்டத்தில் தோராயமாக, 1,284 நாட்டுப் படகுகளும், 274 விசைப் படகுகளும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. மீன்பிடித் தொழிலில் இருந்து நாளொன்றுக்கு 250 டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. ஏற்றுமதிக்கான இறால் மற்றும் கணவாய் மீன்கள் நேரடியாக ஏற்றுமதியாளர்களால் கொள்முதல் செய்யப்படுகின்றன. மேலும், பிடிக்கப்படும் மீன்கள் பெரும்பாலும் உள்ளூர் மீன்கள். அவை தஞ்சை மாவட்டத்தில் மக்களின் தினசரி உணவிற்காக உள்ளூர் வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன. மீதமுள்ள சிறிய மீன்கள் உலர வைக்கப்பட்டு, கருவாடாக மாற்றப்படுகின்றன. இப்பகுதியில் மீதமுள்ள தரமான மீன்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அண்டை மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களுக்கு குளிர்சாதன வசதி செய்யப்பட்ட வேன்கள்மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன. எனவே, பிடிக்கப்படும் மீன்கள் உடனடியாக விற்கப்படுவதால், மீன்கள் தேங்க வாய்ப்பு இல்லை. ஆகையால், பேராவூரணி தொகுதி, கடற்கரைப் பகுதியில் மீன் பதனிடும் பூங்கா அமைக்கும் நிலை தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.*

திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒன்றாம் தேதி நடந்த மீன் வளத் துறை மானியக் கோரிக்கை விவாதத்திலே, எனது திருவொற்றியூர் தொகுதியில் உள்ள 8 மீனவக் கிராமங்களுக்கு ஒன்றரை கோடி ரூபாய் அளவிலே உதவி வழங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்ததை பத்திரிகை வாயிலாக நான் தெரிந்துகொண்டேன். என்னுடைய திருவொற்றியூர் தொகுதியிலே 21 மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. 8 கிராமங்களுக்கு மட்டும் நிதி வழங்குவது எப்படி சரியாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, கேள்வி பேராவூரணி சம்பந்தப்பட்டது. நீங்கள், உங்கள் தொகுதி சம்பந்தப்பட்டதைக் கேட்கிறீர்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தத் திட்டத்தின்கீழ் 8 மீனவக் கிராமங்கள் என்று சொல்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. அந்தத் திட்டம் குறித்து தனது கருத்தைச் சொல்லி, அதனடிப்படையிலே எந்தக் கிராமங்கள் என்று சொன்னால், நான் எந்தத் திட்டம் என்று சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். அதை எழுதிக்கொடுத்தால் மாண்புமிகு அமைச்சரிடம் கொடுத்து விடலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.

திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலுள்ள சிறுதூர் கடற்கரைப் பகுதியில் உள்ள 8 மீனவக் கிராமங்களிலுள்ள மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்துகொண்டிருக்கிறார்கள். சிறுதூரிலே அதிகமாக மீன்பிடித் தொழில் நடைபெறுகிற காரணத்தால், சிறுதூர் கடற்கரைப் பகுதியில் மீன் பதனிடும் பூங்கா அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஊரிலும் 8 மீனவக் கிராமங்கள்தான் இருக்கின்றனபோலும். மீன் பதனிடும் பூங்கா அமைப்பதற்கு மாறுபட்ட கருத்தில்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்கூட முன்வரலாம் அல்லது அவர் சார்பில் யாராவது தனியார் முன்வந்தால்கூட, அரசு முடிந்த அளவுக்கு தனியார் பங்களிப்புடன் அங்கே மீன் பதனிடும் ஓர் அமைப்பை, தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு தயாராக இருக்கின்றது. தற்போது கன்னியாகுமரியில்கூட tender விடப்பட்டு, நிலங்கள் எல்லாம் எடுக்கப்பட்டு, இப்போது அந்தப் பணியானது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதேபோன்று கடலூர், நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தனியார் பங்களிப்புடன் செயல்படக்கூடிய வகையில் நாங்கள் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி இருக்கின்றோம். எங்களுக்கு இதில் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் இப்போது ஒரு technology கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஜப்பான் நாட்டில் slurry ice என்ற ஒரு ice–ஐக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். அதனுடைய ஒரு பிரத்யேகத் தன்மை என்னவென்று பார்த்தால், –60° C– அதாவது கடலில் நம்முடைய மீன்கள் பிடிக்கப்படுகின்றபோது உள்ளூர் தேவைக்கு நாம் பயன்படுத்திக்கொள்கின்றோம். ஆனால், வெளிநாடுகளுக்கு, ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்போது இந்த standard–ல்தான் நம்முடைய மீன்கள் இருக்க வேண்டும் என்று அவர்கள் ஒரு standard வைத்திருக்கின்றார்கள். பொதுவாக அந்த standard–ல் சுமார் 60–70 சதவிகித மீன்கள் வருகின்ற காரணத்தினால், நல்ல விலை நம்முடைய மீனவர்களுக்கு கிடைக்காமல் போய்விடுகிறது. அதனால்தான் ஒரு நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, cold storage–ஐ improve செய்வதற்கு ஒரு பக்கத்தில் எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கின்றது. மறுபக்கத்தில் இதுபோன்ற technology–ஐ அறிமுகப்படுத்த வேண்டும் என்ற ஒரு நிலையும் இப்போது ஏற்பட்டுள்ளது. அதற்கான demo காண்பிப்பதற்காக ஜப்பான் நாட்டிலிருந்து சமீபத்திலே வந்தார்கள். அவர்கள் demo செய்து காண்பித்தார்கள். Fresh ஆகப் பிடிக்கின்ற மீன்களை உடனே அந்த படகிலோ, கப்பலிலோ, நாட்டுப் படகிலோ, கண்ணாடி இழை கட்டுமரங்களிலோ slurry ice–ல் அப்படியே வைத்துவிட்டோம் என்றால், இன்றைக்குப் பிடித்த

[2018 ஜூன் 4

மீன்கள் எப்படி இருக்கின்றனவோ அதேமாதிரி கிட்டத்தட்ட 5 வருடங்களுக்கு அப்படியே இருக்கும். (குறுக்கீடு) Slurry ice–ல் வைத்த மீன்கள் 5 வருடங்களுக்கு அப்படியே இருக்கும். இது proven technology. அதை demo செய்து, அந்த முறையை introduce செய்வதற்காகத்தான் ஜப்பான் நாட்டிலிருந்து இங்கு வந்தார்கள். அந்த demo–வைப் பார்த்தோம். இந்த நடைமுறை பல நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த technology–ஐ நாம் இங்கு அறிமுகப்படுத்தினால், நம்முடைய மீனவர்கள் பெரிதும் பயனடைவார்கள். கடலில் மீன்பிடிக் கலன்களைக் கொண்டு சென்று மீன்களைப் பிடித்து இந்த ice–ல் பதப்படுத்துகிற நிலை வந்துவிட்டால், பிடிக்கப்படுகின்ற மீன்களுக்கு நல்ல விலை கிடைக்கும். மேலும், lean season–ல், அதாவது மீன்பிடிக் குறைவு காலத்தில்கூட பதப்படுத்துகிற இந்த உபரி மீன்களை விற்று, மீனவர்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்குகின்ற ஒரு நிலை ஏற்படும். எனவே, அதுபோன்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கருத்தில்கொண்டுள்ளது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதியில், மல்லிப்பட்டினம் பகுதி என்பது மீன்களை அதிகமாகப் பிடிக்கின்ற ஓர் இடம்; இறால் வளர்ப்பிற்கும் அது ஏற்ற இடமாக அமைந்திருக்கின்றது. அந்தப் பகுதியில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில்தான் படகுத் துறை ஒன்று கட்டப்பட்டது. அந்தப் படகுத் துறையிலிருந்துதான் மீன் பிடிக்கின்ற நிலைமை இதுவரையிலும் இருந்துகொண்டிருக்கின்றது. அதைப் புதுப்பித்தோ அல்லது மாற்றி அமைத்தோ அல்லது மிகச் சிறப்பான முறையில் அமைத்தோ தரவேண்டும். அது அமைக்கப்பட்டதற்குப் பின்னர் அதைச் செய்யாத காரணத்தினால், அங்கே பிடிக்கப்படுகின்ற மீன்களையெல்லாம் பதப்படுத்த இயலவில்லை. நம்முடைய பேராவூரணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், அந்த மல்லிப்பட்டினம் பகுதியில் ஒரு மீன் பதனிடும் தொழிற்சாலை இருந்தால்தான் நன்றாக இருக்கும். இப்போது கொச்சி வரையில் அங்கு பிடிக்கப்படுகின்ற மீன்களைக் கொண்டு செல்கின்ற நிலை

இருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் கொச்சியை அடைய வேண்டிய சூழ்நிலை இருப்பதனால், மிக வேகமாக வாகனங்களை ஓட்டிச் செல்கின்ற நிலை இருக்கிறது. எனவே, மீன்களை அங்கேயே பதப்படுத்துகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கினால், மீன்களைப் பதப்படுத்தி கொண்டு செல்வதற்கு ஏற்றதாக அமையும். அதனால், அதனை அவசியம் செய்து கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் நிச்சயமாக மாறுபட்ட கருத்து ஒன்றும் இல்லை. அந்த இடத்தில் அந்த மீன் பதனிடும் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும். அதனை தனியார் பங்களிப்புடன் அமைத்தால் மிகவும் சிறப்பாக இருக்கும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்கூட இதற்கு முன்வந்து, அந்தப் பகுதியில் ஒரு குளிர்பதனக் கிடங்கை அமைத்துத் தந்தால், நம்முடைய மீனவர்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு அது வழிவகையாக இருக்கும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக, நான்கரை இலட்சம் டன் அளவிற்கு* Marine Products Export Development Authority (MPEDA) *மூலமாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றது. இதனை அதிகமாக்க வேண்டுமென்றால், குளிர்பதனக் கிடங்கு என்பது மிக மிக அவசியம். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம், அரசின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்; இதனை அரசு செய்யும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு முன்வந்தால், முன்னுரிமை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*